திரு. நா. வீராசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழித்தடங்கள் லைசன்ஸ் வழங்குகின்றபோது முன்னாள் ராணுவத்தினர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க அரசு உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரொம்ப சோணத்தில் இருக்கின்ற முன்னாள் ராணுவத்தினர் கூட்டுறவுச் சங்கங்கள் கேட்டால் கொடுக்கவில்லை. அதற்கான முறையில் சட்டம் செய்யப் படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள சட்டத்தின்படி அதர் திங்ஸ் பீயிங் ஈக்குவல், மற்றவர்களுக்குச் சமமாகவிருந்தால் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை அளிக்க வேண்டுமென்று சட்டமிருக்கிறது. ஆனால், அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு சிபார்சு செய்திருக்கிறது.

City routes for private buses

* 387 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether the route miles for the private buses plying as City buses have been increased;

(b) if so, the result thereof;

(c) whether it is a fact that some areas in Madurai District are not covered even after official announcement was made; and

(d) if so, the reasons thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது மத்திய சர்க்காரின் விதி முறைப்படி 15 மைலுக்குள் ஓடுகின்ற பஸ்கள் எல்லாம் சிடி பஸ்கள் என்று மாற்றப்பட்டு வருகிறது. அது மாதிரி பல சிடி பஸ் ரூட்கள் ஆரம்பிக்கப்பட்ட வகையில் மதுரை—திருமங்கலத் திற்கிடையே இப்பொழுது நான்கு பஸ்கள் தான் போகிறது. அந்த ரூட்டில் அதிக பஸ்கள் விட அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த நகர பஸ்களை அதிகரிக்க வேண்டுமென்ற அடிப்படையில் மதுரை-திருமங்கலம் ரூட்டில் டெம்பரரி பர்மிட்டில் நான்கு பஸ்கள் ஓட இப்பொழுது அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டுக்கு அனுமதி அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அவ்வப்போது தேவைக்கேற்ப அதிகாரிகள் பரிசீலனை செய்து ஆவன செய்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1971 ஜூலை 22[

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்

திருச்சி நகரத்தில் காவல் துறையினர் செய்த தடியடியும் அதன் விளைவுகளும் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக் கிருர்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, நான் அறிக்கை கொடுத்திருக்கும் மிகவும் அவசரமும் முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு தீர்மானத்தைப் பற்றி எனது கருத்தைச் சுருக்க மாகச் சொல்ல விரும்புகிறேன்.

Sir, I move that the business of the House do stand adjourned to discuss a matter of urgent public importance, i.e., "That the Police resorted to lathi charge in Trichy Town on 20th July 1971 in which many people suffered injuries."

என்று கொடுத்திருக்கிறேன். இது சம்பந்தமாக எனக்குக் கிடைத்துள்ள தகவல்களைப் பற்றி இங்கே சுட்டிக் காட்டுகிறேன். ஒரு ஆங்கிலோ-இண்டியன் பெண்மணி, இரண்டு வாரங்களுக்கு முன்னல் திருச்சியில் பிராம்மணர்களும் மற்றவர்களும் குடியிருக்கின்ற ஒரு பகுதியில் தனிமையாக இரவு நேரத்தில் சென்று கொண்டிருந்த நேரத்தில் யாரோ சிலர் அந்தப் பெண்மணியைப் பரிகாசம் செய்ததாகவும், அது சம்பந்தமாகப் போலீசாருக்கு அந்தப் பெண்மணி ஒரு புகார் கொடுத்த தாகவும் தகவல் வந்திருக்கிறது. அந்த மனு இரண்டு வார காலத்திற்கு விசாரணை செய்யப்படாமல் இருந்து, மறுபடியும் 19-ஆம் தேதியன்று அதைப் புதுப்பித்ததாகவும் அன்றையதினம் ஒரு சில டாக்சி டிரைவர்களையும் ஆட்டோ ரிக்ஷா டிரைவர் களையும் திரு. கல்யாணசுந்தரம் என்ற ஒரு சப்-இன்ஸ்பெக்டர் கைது செய்திருக்கிருர். அவர்களை ஜாமீனில் விடுதலை செய்ய வேண்டுமென்று தொழிலாளர்கள்சார்பில் கேட்கப்பட்டு அதற்கு வேண்டிய ஜாமீனையும் கொடுக்க அவர்கள் தயாராகவிருந்தார்கள். ஆனல் ஏதோ சில காரணத்தால் அந்த எஸ்.ஐ. அவர்களும் அந்த இலாக்காவினரும் அவர்களை ஜாமீனில் விடுவதற்கு மறுத்த தாகவும் அதைத் தொடர்ந்து 20-ஆம் தேதியன்று இது சம்பந்தமாகத் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு குழப்பம் ஏற்பட்ட தாகவும், அதிலிருந்து லத்தி சார்ஜ் செய்ததாகவும், அந்த லத்தி